### தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் காலியாக உள்ள

# 3 ஆயிரத்து 935 பணியிடங்களுக்கு குரூப் 4 தேர்வு!

### ஜூலை 12-ஆம் தேதி நடைபெறும் – டி.என்.பி.எஸ்.சி. அறிவிப்பு!

சென்னை, ஏப். 27-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் உள்ளிட்ட 3 ஆயிரத்து 935 காலிப் பணியிடங்களாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணியிடங்களுக்கு, வரும் ஜூலை மாதம் 12ஆம் தேதி குரூப் 4 தேர்வு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குரூப் 4 தேர்வுக்கு, டி.என்.பி.எஸ்.சி. இணையதளம் மூலம், ஏப்.25 முதல் அடுத்த மாதம் 24ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்றும், விண்ணப்பங்களில் திருத்தம் மேற்கொள்ள மே 29ம் தேதி முதல் 31ம் தேதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க குறைந்தபட்ச கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு படித்திருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.4.2025) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.4.2025) தலைமைச் செயலகத்தில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா 2025–2026 ஆம் ஆண்டிற்கான தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### டெல்டா மாவட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் ஆறுகள் – நீர்வழிகள் தூர் வாரப்படும்!

# பாசனத்திற்காக ஜூன் 12 அன்று மேட்டூர் அணை திறக்கப்படும்!

### சட்டப்பேரவையில் – கவன ஈர்ப்புக்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பதில்!



சென்னை, ஏப்.27-

பாசனத்துக்காக ஜூன் 12-ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும் என்று சட்டப்பேரவையில்சிறப்புகவனஈர்ப்பில் நீர்வளத்துறைஅமைச்சர் துரைமுருகன் அவர்கள் விளக்கம் அளித்து பேசினார்.

**சட்டப்பேரவையில் உறுப்பினர் இரா. காமராஜ்,**

“டெல்டா மாவட்டங்களில் சிறப்பு தூர் வாரும் திட்டத்தின் மூலம், ஆறுகள் தூர் வாருதல் மற்றும் நீர்வழிகள் சரிபார்த்தல் போன்ற பணிகளை ஒவ்வோர் ஆண்டும் செய்து வருகிறோம். மேட்டூர் அணை திறப்பதற்கு முன்பாகவே பணிகளை முடித்துத் தர வேண்டும்” என்று கவன ஈர்ப்பில் கோரிக்கை விடுத்து பேசினார். இதற்கு பதிலளித்து **நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசியதாவது:-**

உறுப்பினர் தஞ்சாவூரில் பேசுவதைப் போன்று பேசியிருக்கிறார். அது முறைதான். அதில் ஒன்றும் தவறில்லை. ஆனால், கடந்த ஆண்டு மழை பெய்த போது, நீர்பிடிப்பு பகுதிகளெல்லாம், ஆறுகள், கால்வாய்கள், வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களில் வெள்ள நீர் சென்றதால், மண்திட்டுக்கள் ஏற்பட்டுள்ளது. இந்த மண் திட்டுக்களை அகற்றி, தண்ணீர் தங்கு தடையின்றி செல்வதற்கு வழி செய்யும்பொருட்டு, திருச்சி, தஞ்சாவூர் உள்ளிட்ட 12 மாவட்டங்களில் 5,021.74 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாசன அமைப்பு ஆதாரங்களை மேற்கொள்ள முன்னுரிமை அடிப்படையில் தூர்வார முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு சிறப்புத் தூர்வாரும் திட்டத்தின்கீழ் ரூ.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 882 பணிகளாகப் பிரிக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இப்பணிகளைத் திறம்பட செய்து முடிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மேற்பார்வை அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்பணிகள் அனைத்தும் மே மாதம் இறுதிக்குள் முடிக்கப்படும். இந்த ஆண்டு ஜூன் 12-ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பினர் இன்னொன்றை சொன்னார். கடந்த 4 ஆண்டுகளில் எத்தனை தூர்வாரும் பணிகளில் நாங்கள் ஈடுபட்டோம் என்பது குறித்த ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன். தூர்வாரும் பணிகளே ஒரு காலத்தில் கிடையாது.

நான் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது முதலமைச்சர் அவர்கள்தான் தூர்வாரும் பணிகளை கொண்டுவந்தார். அப்போது எல்லோரும் பாராட்டினார்கள். அதனால், 2021-2022ல் 63 கோடி ரூபாய், 2022-2023ல் 78 கோடி ரூபாய், 2023-2024 ல் 80 கோடி ரூபாய், 2024-25ல் 95 கோடி ரூபாய் என நிதியொதுக்கப்பட்டு ஆண்டுதோறும் அணையின் பாசனத்திற்கு திறந்து விடுவதற்காக எல்லா கால்வாய்களும் தூர்வாரப்படுகின்றன. அதன் விளைவாக, நான்கு ஆண்டுகளாக அணையிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் கடைமடை வரை சென்றிருக்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் மேட்டூர் அணை திறக்கப்பட்ட விவரத்தை சொல்கிறேன். 2021-ம் ஆண்டில் ஜூன் 12-ஆம் தேதி, 2022-ஆம் ஆண்டில் தண்ணீர் இல்லாத காரணத்தால் முன்கூட்டியே மே மாதமே திறந்து விட்டோம். 2023-ஆம் ஆண்டில் ஜூன் 12-ஆம் தேதி, 2024-ஆம் ஆண்டில் பருவ மழை காரணமாக 28-ஆம் தேதி அதை திறந்திருக்கிறோம்.


இன்னொன்றை நண்பர் சொன்னார், இந்த குடிமராமத்து இல்லையென்று சொன்னீர்கள். அது குடிமராமத்து உங்களுக்குத் தெரியும். RRR Work என்று ஒன்று கொண்டுவந்திருக்கிறோம். அந்த RRR-னுடைய Work என்னவென்றால், இந்த தூர்வாரும் பணிதான். தற்போது செய்திருக்கும் பணிகள் தான். இந்தத் திட்டத்தின்மூலம் அதில் விவசாயிகளும் பங்கு கொண்டிருக்கிறார்கள். சர்க்காரும் பங்கு கொண்டிருக்கிறது. இரண்டாவது, இலவசமாக மண் எடுத்துக்கொண்டு செல்லலாம் என்று விவசாயிகளிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் மூலமாகவும் தூர்வாரிக்கொண்டுபோயிருக்கிறார்கள். RRR Workயிலும் செய்கிறோம். தமிழ்நாடு அரசு நிதியுதவியும் செய்கிறோம். விவசாயிகளையும் கலந்து கொள்ளச் செய்கிறோம். ஆகமொத்தம், கூட்டிப்பார்த்தால் அதுதான் மராமத்து வேலை.

விவசாயத்தைக் குறித்து, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற நிலைமைகளை அவர் சொன்னார். Shutterகளுக்கெல்லாம் பணம் ஒதுக்கவில்லை என்றார். என்னுடைய மானியக் கோரிக்கையில் மறுபடியும் எடுத்துப் பார்த்தால் இந்த ஆண்டு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறோம் என்று தெரியும். அவர் சொன்னதை ஏற்றுக்கொள்கிறேன். இப்பிரச்சினை வெகுநாட்களாக இருக்கிறது. நாங்கள் இப்போதுதான் ஆட்சிக்கு வந்தோம். நான்கு வருடங்களுக்கு முன்னால்தான் வந்தோம். அது எல்லா இடங்களிலும் வெகுநாட்களாக பழுதடைந்துள்ளது.

இரண்டாவது, shutterகளை மாற்றி விட்டு வந்தால், அடுத்து, அதை திருடர்கள் திருடிச் சென்றுவிடுகிறார்கள். ஏரிக்கரைகள், நீர்நிலைகள், மதகுகள் போன்ற இடங்களில் பொருத்தப்படுவதைத் திருடிக்கொண்டு சென்றுவிடுகிறார்கள். அதைக்கொண்டுபோய் விற்றால் காசு வருகிறது. எடுத்துக்கொண்டு ஓடிவிடுகிறார்கள். அதையும் கழட்ட முடியாதபடி செய்வதற்கும் ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்றாவதாக, அவர் சொன்னது போன்று, அவர் சொன்ன இடங்களெல்லாம் நான் குறித்து வைத்திருக்கிறேன். ஏனென்றால், விவசாயத்தின் நலனுக்காக தெரிவித்திருக்கிறீர்கள். ஆகையால், நிதிநிலைமைக்கேற்ப அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்கிற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உறுதிபட தெரிவித்தார்.



நீலகிரி மாவட்டம், உதகைக்கு நேற்று முன்தினம் (25.04.2025) வருகை புரிந்த இந்திய குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் அவர்களுக்கு நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா அவர்கள் புத்தகம் வழங்கி வரவேற்றார்.

### 5 ஆண்டுகள் என்ற விதியைத் தளர்த்தி – காவிரி டெல்டா பகுதிகளில் மட்டும்

# 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை சாலைகளைச் செப்பனிடலாமா என அரசு ஆலோசனை!

### சட்டப் பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு தகவல்!



சென்னை, ஏப். 26-

சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளும் அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதில்களும் வருமாறு:-

**க.சொ.க.கண்ணன்:** ஜெயங்கொண்டம் முதல் ஆத்துக்குறிச்சி வரை உள்ள மாநில நெடுஞ்சாலையை மூன்று அல்லது நான்கு வழித்தடமாக அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**அமைச்சர் எ.வ.வேலு :** உறுப்பினர் அவர்கள் கோரிய விருத்தாசலம் - ஜெயங்கொண்டம் - மதனத்தூர் சாலையானது ஒரு மாநில நெடுஞ்சாலையாகும். இதன் மொத்த நீளம் 49 கி.மீ. ஆகும். 26 கி.மீ. நீளமுள்ள இருவழிச் சாலையை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணி CMRDPமுதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டம் மூலம் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்கெனவே முடிக்கப்பட்டு, பொது மக்களுடைய பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 4 கி.மீ. நீளமுள்ள சாலை, கடின புருவங்களுடன்கூடிய 10 மீட்டர் அகலம் கொண்ட இருவழிச் சாலையாக உள்ளது. மீதமுள்ள ஜெயங்கொண்டம் முதல் மதனத்தூர் வரையுள்ள 18 கி.மீ. நீளம், மதனத்தூர் முதல் கும்பகோணம் வரையுள்ள 12 கி.மீ. நீளம் என மொத்தம் 30 கி.மீ. நீளத்திற்கு நான்குவழிச் சாலையாக மேம்படுத்துவதற்கு, TNRSP தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் அலகின் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு நிதி நிலை மைக்கேற்ப அந்தப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

**க.சொ.க.கண்ணன்:** அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, கும்பகோணம்ஜெயங்கொண்டம் - விருத்தாசலம் - உளுந்தூர்பேட்டை - சென்னை செல்லக்கூடிய பிரதான சாலையாக உள்ளது. திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசுக்கு வந்துள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எனவே, இந்த ஆண்டே ஜெயங்கொண்டம் முதல் மதனத்தூர் வழியாக கும்பகோணம் வரை மீதமிருக்கக்கூடிய சாலையை மேம்படுத்தும் பணியை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே முடித்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் எ.வ.வேலு:** ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிற நான்கு வழி சாலை என்பது முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் செய்திருக்கிறோம். இன்னொரு அலகு, TNRSP, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட அலகு என்பது இன்னொரு திட்டம். அந்தத் திட்டத்தின்கீழ் தற்போது DPR தயார் செய்து கொண்டிருக்கிற காரணத்தினால்தான், முதலமைச்சர் அவர்களிடம் கலந்துபேசி, இந்த நிதியாண்டிலேயே அதனை செய்ய முடியுமா என்பதை ஆய்வு செய்து, அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் சொல்வது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

**க.சொ.க.கண்ணன்:** எனது ஜெயங்கொண்டம் தொகுதியில் குவாகம்கொடுக்கூர் 2 கிலோ மீட்டர் சாலையை ஒருவழித் தடத்திலிருந்து இடைவழித் தடமாகவும், சிலால் அணைக்கரை சாலையை இடைவழித் தடத்திலிருந்து இருவழித் தடமாகவும் தரமுயர்த்தித் தர அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா.

**அமைச்சர் எ.வ.வேலு:** அவர் சொல்கிற சாலையைப் பொறுத்தளவில், அதனை நாங்களும் அறிவோம். இந்த ஆண்டு நிதிநிலைக்கேற்ப அந்தச் சாலை எடுத்துக் கொள்ளப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ம. சிந்தனைசெல்வன்:** காட்டுமன்னார்கோவில் போன்ற நீர்ப்பாசனம் அதிகமாக இருக்கக்கூடிய நெல் வயல்களைக் கொண்டிருக்கிற பகுதிகளில் அமைக்கப்படுகின்ற சாலைகள், பொதுவாக மாநில அளவிலான தரத்தின் அடிப்படையில் அமைக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பகுதியில் இருமருங்கிலும் சேரும் சகதியுமாக இருக்கின்ற விளைநிலங்கள் இருக்கின்ற காரணத்தினால், டெல்டா பகுதிகளில், காட்டுமன்னார்கோவில் போன்ற வயல்வெளிகள் நிறைந்த பகுதிகளில் அந்தச் சாலையின் தரம் கூடுதலாக உயர்த்தப்படுவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** அவர் சொல்கின்ற சேறும், சகதியும் என்பது soilஐப் பொறுத்தளவிற்கு. ஏனென்றால், உறுதியான soil இருந்தால்தான், அரசு சொல்கிற 5 ஆண்டு காலத்திற்கு அந்தச் சாலை போடப்பட்டு பயன்படுத்த முடியும். ஆனால், இந்த சேரும், சகதி என்ற அடிப்படையில் soil சரியில்லாத காரணத்தினால், 5 ஆண்டுக்கு என்று சாலை போட்டாலும்கூட, அது 3 ஆண்டுகளிலேயே செப்பனிடப்பட்ட சாலையில் நெளிவு ஏற்பட்டு விடுகிறது; சாலை சரிமானம் ஏற்பட்டு விடுகிறது; வெடிப்பு வந்துவிடுகிறது. முதலமைச்சர் அவர்கள் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு ஒரு சுற்றுப் பயணம் செல்கின்றபோது, வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்; காவிரி டெல்டா பகுதிகளில் மட்டும் 5 ஆண்டுகள் என்ற அந்த விதியை சற்று தளர்த்தி, 3 ஆண்டுகளாக இருந்தால் நன்றாக இருக்குமென்று சொன்னார்கள். அதேபோல், நம்முடைய பொதுவுடைமை கட்சியைச் சார்ந்தவர்களும் இதனை என்னிடத்தில் நேரடியாக மனுக்களாகக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையில் அதனை 3 ஆண்டு காலத்திற்கு அது போடப்பட்டால் சரியாக இருக்குமா என்பதை technical feasibilityஐ நாங்கள் ஆய்வு செய்ய சொல்லியிருக்கிறேன். அது உங்களுக்கு சாதகமாக வருமென்று சொன்னால், முதலமைச்சர் அவர்களிடத்தில் கலந்துபேசி, அந்த காவிரி டெல்டா பகுதிகளில் மட்டும் 3 ஆண்டு காலமாக அதனை மாற்றலாமா என்று அரசும், நிதித் துறையும் சேர்ந்து அதனை ஆய்வு செய்து, பின்னால் அறிவிக்கப்படும்.

**ந.தியாகராஜன்:** எங்களுடைய நாமக்கல் - திருச்சிராப்பள்ளி சாலையில் நாமக்கல் முதல் முசிறி வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தியிருக்கின்றார்கள். அதேபோல், முசிறியிலிருந்து No.1 tollgate வரை உள்ள சாலையை எப்போது அகலப்படுத்த வாய்ப்பிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவுப்படுத்த வேண்டுகிறேன்.

**அமைச்சர் எ.வ. வேலு:** நம்முடைய காடுவெட்டி தியாகராஜன் அவர்கள் ஏற்கெனவே இது சம்பந்தமாக என்னிடத்தில் சொன்னதன் அடிப்படையில், துறையை அழைத்து நான் பேசுகிற போது, காவிரி ஆறு ஒரு பகுதியில் இருக்கிறது. அங்கே சாலை போட வேண்டுமென்று சொன்னால், காவிரி ஆறு பகுதியில் ஒரு தடுப்புச் சுவர் கட்ட வேண்டும். ஏனென்றால், தடுப்புச்சுவர் கட்டினால்தான் அந்தச் சாலையை நாம் செப்பனிட முடியும். அது சம்பந்தமாக ஆய்வினை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். அது முழுமையடைகிறபோது, முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிகளை பெற்று, அந்தச் சாலை செப்பனிடப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.



ஒருங்கிணைந்த கோவை மாவட்ட கழகத்தின் சார்பில் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக்கழக நிர்வாகிகள் அறிமுக பாசறைக் கூட்டம் கோவை, முதலிபாளையம், எம்.என்.சி.ஆர். கிராண்ட் பேலஸ் அரங்கில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையில் கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், நா.கார்த்திக், தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர், கனிமொழி கருணாநிதி எம்.பி., திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர், பேராசிரியர் சுப.வீரபாண்டியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டரணிச் செயலாளர், மேற்கு மண்டல மகளிர் அணி பொறுப்பாளர் நாமக்கல் ப.இராணி, கழக மகளிர் அணி பிரச்சாரக்குழுச் செயலாளர், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட மகளிர் அணி பொறுப்பாளர் செ.உமாமகேஸ்வரி, கழக மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார், கழக மகளிர் தொண்டரணி துணை செயலாளர்கள் நா.மாலதி நாகராஜ், சத்யா பழனிக்குமார், முனைவர். கணபதி ராஜ்குமார் எம்.பி., கே.ஈஸ்வரசாமி எம்.பி., உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.